# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2012 - 2013

## தமிழ்மொழி - வளர் தமிழ் 9

சுட்டெண்:........................................................... நேரம்: 180 மணித்துளிகள்

---

**1) சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. இலங்கையின் தொல்குடிகள்

   அ) சிங்களவர், பறங்கியர் ஆ) சிங்களவர், ஆங்கிலேயர்

   இ) இயக்கர், நாகர் ஈ) பறங்கியர், ஆங்கிலேயர்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. 'புதியதொருவீடு' என்ற பாடத்தில் மணல் மீது படங்கீறியது

   அ) ஆமை ஆ) நண்டு

   இ) இறால் ஈ) தவளை

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. பின்வருவனவற்றுள் அடுக்குத்தொடர்

   அ) கன்னங்கரிய ஆ) மளமள

   இ) ஏறி இறங்கி ஈ) நடந்து நடந்து

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. இன்று மழை பெய்தது. என்ற சொல்லியம்

   அ) கூட்டுச் சொல்லியம் ஆ) தனிச் சொல்லியம்

   இ) கலப்புச் சொல்லியம் ஈ) ஏவற் சொல்லியம்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. இயல்புப் புணர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) மணல்வீடு　　　ஆ) முட்செடி
இ) கடற்கரை　　　ஈ) வாழைப்பழம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. கோவேத என்ற சொல்லில் 'கோ' என்ற எழுத்துக் குறிப்பது

அ) கடவுளை　　　ஆ) ஆவினை
இ) புலவரை　　　ஈ) மன்னனை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. பகாச்சொல்லுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

அ) தமிழர்　　　ஆ) மண்
இ) காவலன்　　　ஈ) பெறுநர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. தனிநாயகம் அடிகளாரின் இயற்பெயர்

அ) மயில்வாகனம்　　　ஆ) சேவியர்
இ) விபுலாநந்தர்　　　ஈ) வீரமாமுனிவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. பெயர்ச் சொற்கள் எத்தனை வகைப்படும்?

அ) 4　　ஆ) 7　　இ) 5　　ஈ) 6

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. யாழ்ப்பாணத்தில் தமிழாராய்ச்சி மாநாடு நடந்த ஆண்டு

அ) 1978　　ஆ) 1972　　இ) 1974　　ஈ) 1973

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. கூலவகைப் பயிர்களில் ஒன்று

அ) கத்தரி　　ஆ) பலா　　இ) நெல்　　ஈ) பாகல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. தாயின் தாலாட்டு என்ற பாடற்பகுதி இடம் பெற்ற இலக்கியம்

அ) அகநானூறு ஆ) சிலப்பதிகாரம்

இ) புறநானூறு ஈ) நல்வழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. மகாவம்சம் சார்ந்த பௌத்தம்

அ) பௌத்தமதம் ஆ) தேரவாதம்

இ) மகாயானம் ஈ) தீபவம்சம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. இது ஒளிநிலாவினுடைய பள்ளிப்பை. இதில் இடம் பெற்றுள்ள வேற்றுமை

அ) 4ம் வேற்றுமை ஆ) 2ம் வேற்றுமை

இ) 6ம் வேற்றுமை ஈ) 3ம் வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. கலைஞன் என்ற பகுசொல்லைப் பகுத்தால்

அ) கலை + ஞன் ஆ) கலை + ஞ்ஞன்

இ) கலைஞ் + ஞன் ஈ) கலை + ஞ் + அன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. பின்வரும் சொற்களில் கெடுதல் புணர்ச்சி

அ) வாழைமரம் ஆ) பொற்குடம்

இ) வட்டமேசை ஈ) கற்குகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வருவது

அ) பகுதி ஆ) விகுதி இ) சந்தி ஈ) சாரியை

அ) ☐ ആ) ☐ இ) ☐ ஈ) ☐

18. தேன்மொழி என்ற உவமை அணியில் வந்துள்ள உவமேயம்

அ) தேன் ஆ) இனிமை இ) மொழி ஈ) அழகு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. ஒரு சொல்லின் பண்பைச் சிறப்பித்துக் கூறப்பயன்படும் சொற்கள்

அ) இடைச்சொற்கள் ஆ) பெயர்ச்சொற்கள்

இ) வினைச்சொற்கள் ஈ) உரிச்சொற்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. பின்வருவனவற்றுள் இறந்தகால இடைநிலைகள்

அ) கிறு,கின்று ஆ) த்,ட்,ற்,இன்,ன் இ) ப்,வ் ஈ) க்,ச்,ட்,ப்,ற்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த ஆண்டு

அ) 1505 ஆ) 1504 இ) 1506 ஈ) 1507

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. விசயன் இலங்கைக்கு வருமுன் நாகர்கள் வாழ்ந்த பகுதி

அ) நாகதீபம் ஆ) கல்யாணி

இ) உருகுணை ஈ) கொழும்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவி

அ) ஓடி ஓடி ஆ) பாம்புபாம்பு இ) நடுநடுங்கி ஈ) படபட

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. செக்கச் சிவந்த என்னும் சொல்

அ) அடுக்குத்தொடர் ஆ) அடுக்கிடுக்குத்தொடர்

இ) இணைமொழி ஈ) இரட்டைக்கிளவி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. பல் + பொடி என்பதைச் சேர்த்தால் வருவது

அ) பல்பொடி ஆ) பற்பொடி

இ) பற்ப்பொடி ஈ) பட்பொடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. ‘மீண்டும் தொடங்கும் மிடுக்கு’ என்ற பாடத்துடன் தொடர்புடைய தொழில்

அ) கைத்தொழில் ஆ) வணிகத்தொழில்

இ) உழவுத்தொழில் ஈ) நெசவுத்தொழில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. இலங்கையில் மிகப்பெரிய தாழிக்காடு உள்ள இடம்

அ) பொம்பரிப்பு ஆ) பூநகரி

இ) மன்னார் ஈ) அநுராதபுரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. போர்த்துக்கேயர் இலங்கைத்தீவில் காலடி வைத்தபோது அங்கு இருந்த அரசுகளின் எண்ணிக்கை

அ) நான்கு ஆ) மூன்று இ) ஐந்து ஈ) ஆறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. படித்தல் என்பது

அ) பொருட்பெயர் ஆ) சினைப்பெயர்

இ) தொழிற்பெயர் ஈ) குணப்பெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. ஓடுகிறது என்பது

அ) உயர்திணை ஆண்பால் ஆ) உயர்திணைப் பலர்பால்

இ) அஃறிணைப் பலவின்பால் ஈ) அஃறிணை ஒன்றன்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பாடலை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

பறவைதன் கூட்டில் வாழ்கின்றதுவே
பார்ப்புக்களுடனே மகிழ்கின்றதுவே
இரையைத் தேடிக்கொண்டுவந்து
இன்பமுடனே கொடுக்கின்றதுவே

மான் காட்டில் வாழ்கின்றதுவே
மகிழ்வுடன் தனது குட்டிகளுடனே
தேனீயும் மரத்தில் கூடுகட்டி
சேர்ந்து ஒன்றாய் வாழ்கின்றதுவே

எலியும் வளையில் வாழ்கின்றதுவே
எங்கும் ஓடித்திரிகின்றதுவே
எறும்பும் புற்றில் வாழ்கின்றதுவே
என்றும் சுறுசுறுப்பாய் ஊர்கின்றதுவே

எங்களுக் கென்றொரு நாடில்லாமல்
ஏங்கி நாங்கள் தவிக்கின்றோமே
அந்நிய நாட்டில் அங்கு மிங்கும்
அலைந்து நாங்கள் திரிகின்றோமே

எண்ணிப் பார்த்தால் இதையும் நன்றாய்
என்ன கரணியம் என்பது புரியும்
எங்களுக்கோர் நாடு வேண்டும் என்று
எல்லோரும் ஒன்றாய் நினைத்தால் விடியும்

1. நாங்கள் ஏன் ஏங்கித் தவிக்கின்றோம்?

________________________________________

________________________________________

________________________________________

2. என்றும் சுறுசுறுப்பாய் ஊர்ந்து திரிவது எது?

______________________________

______________________________

______________________________

3. எங்களுக்கு நாடு கிடைக்க நாங்கள் என்ன செய்யவேண்டும்?

______________________________

______________________________

______________________________

4. எலி எங்கே வாழ்வதாகக் கூறப்படுகின்றது?

______________________________

______________________________

______________________________

5. இப்பாடலிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது என்ன?

______________________________

______________________________

______________________________

புள்ளிகள் 10

## 3) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

குருவிச்சை என்று ஒரு மரம், இது தாயகத்தில் அதிகம் காணப்படும். இம் மரத்தின் இயல்பு என்ன வென்றால் அது இன்னொரு மரத்தைச் சார்ந்தே வளரும். அதாவது ஒரு மரத்தின் மீது ஒட்டியே வளரும். இவ்வாறு வளரும் மரத்தை 'ஒட்டுண்ணி' என்று அழைப்பார்கள். இக் குருவிச்சை மரம் ஒன்று வேப்பமரத்தின் மீது ஒட்டி வாழ்ந்து வந்தது. வேப்பமரம் நிலத்தில் இருந்து உறிஞ்சி எடுக்கும் சத்துகள் எல்லாவற்றையும் குருவிச்சை உறிஞ்சி எடுத்துவிடும். எந்தத் துன்பமும் இல்லாமல் சுகமாக வாழ்ந்து வந்தது. ஒரு நாள் வேப்பமரத்தை வெட்டுவதற்கு வீட்டுக்காரன் கோடரியுடன் வந்து நின்றான். வேப்பமரத்தை வெட்டத் தொடங்கினான். அப்பொழுது குருவிச்சை மிகவும் பயந்து வேதனைப்பட்டது. "ஐயோ வேப்பமரம் வெட்டப்படுகிறதே நான் இப்போ என்ன செய்வது வேப்பமரத்தை நம்பியே என் வாழ்வு இருந்தது இப்போது வேப்பமரத்துடன் என்வாழ்வு முடியப் போகின்றதே என்ன செய்வது" என்று கலங்கியது. வேப்பமரம் வீழ்ந்தது. குருவிச்சையும் வெட்டி வீசப்பட்டது. இதில் இருந்து நாம் ஒன்றை அறிந்து கொள்வோம். நாங்கள் மற்றவர்களின் உழைப்பில் வாழ்வதை விட்டு எங்கள் சொந்த உழைப்பில் வாழப்பழகிக் கொள்ளவேண்டும்.

1. இங்கு ஒட்டுண்ணி என்று அழைக்கப்பட்ட மரம் எது?

_______________________________________________

_______________________________________________

2. குருவிச்சை மரம் எந்த மரத்தின் மீது ஒட்டி வாழ்ந்து வந்தது?

_______________________________________________

_______________________________________________

3. ஒட்டுண்ணி என்றால் என்ன?

_______________________________________________

_______________________________________________

4. குருவிச்சை மரத்தை எங்கே அதிகம் காணலாம்?

_______________________________________________

_______________________________________________

5. இப்பந்தியில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது என்ன?

_______________________________________________

_______________________________________________

புள்ளிகள் 10

## 4) பாடநூல் வினா - ஏழில் ஐந்திற்கு விடை தருக

1. தனிநாயகம் அடிகளார் இறுதியாக வெளியிட்ட நூல் எது?

_______________________________________________

_______________________________________________

2. திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் வாழ்ந்ததற்கான சான்று யாது?

_______________________________________________

_______________________________________________

3. வீரத்தாய் தன் மகனைப் போருக்கு எவ்வாறு அனுப்பி வைத்தாள்?

_______________________________________________

_______________________________________________

4. விசயன் இலங்கைக்கு வருமுன்னரே அங்கு வாழ்ந்த ஆதிக்குடிகள் யாவர்?

_______________________________________________

_______________________________________________

5. வயல் வாடிய போது பெய்யாத மழை பின்னர் என்ன செய்தது?

_______________________________________________

_______________________________________________

6. தாயின் தாலாட்டு என்ற பாடலில் வீரமகன் எதை மீட்கும் போரில் வீரச்சாவடைந்தான்?

_______________________________________________

_______________________________________________

7. தனிநாயகம் அடிகளார் திருக்குறளை எவ்வெவ் மொழிகளில் மொழி மாற்றுவித்தார்?

_______________________________________________

_______________________________________________

புள்ளிகள் 10

## 5) இலக்கண வினா - விடை தருக.

1. வேற்றுமை உருபுகள் எத்தனை?

______________________________

______________________________

2. மாறுபடு புணர்ச்சிகள் எத்தனை? ஏதாவது இரண்டிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

______________________________

______________________________

3. நிகழ்கால இடைநிலைகள் எவை? ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

______________________________

4. 'எழுதுவான்' இதன் திணை பால் இடம் எழுதுக.

| திணை | பால் | இடம் |
|---|---|---|
| __________ | __________ | __________ |

5. ''பவளவாய்'' இதன் உவமானம், உவமேயம், பொதுத்தன்மையைத் தருக.

உவமானம் ______________

உவமேயம் ______________

பொதுத்தன்மை ______________

புள்ளிகள் 15

**6) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

எங்கள் வீட்டுத்தோட்டம் பயனுள்ளது. நாங்கள் எங்களுக்குத் தேவையான காய்கறிகளை எங்கள் தோட்டத்தில் பயிரிடலாம். அவற்றை எங்கள் சமையலுக்குப் பயன்படுத்தலாம். நாங்கள் காய்கறிகள் வாங்கும் பணத்தைச் சேமித்து வேறு தேவைகளுக்குச் செலவழிக்கலாம். தோட்டம் செய்தல் ஒரு பொழுதுபோக்கு. அது மகிழ்ச்சியையும் தருகிறது. அதனால் நாங்கள் தோட்டத்தை நன்கு பயன் படுத்தவேண்டும்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ தனிநாயகம் அடிகளார்.

★ மகாவம்சம் ஒரு வரலாற்று நூலல்ல.

★ கணனியின் வளர்ச்சியும் அதன் நன்மையும் தீமையும்.

புள்ளிகள் 20